


**19.9.2024**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அரசு வேலைகள் முறைகேடின்றி கிடைப்பதை பி.ஜே.பி. அரசு உறுதிசெய்யும் என்று கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திரமோடி ஸ்ரீநகரில் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

2. தூய்மை பாரத இயக்கம், ஆக்கப்பூர்வமான தேசிய இயக்கமாக உருவெடுத்துள்ளது என்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

3. நாட்டுமக்கள் அனைவருக்கும் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதிசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக மத்திய உணவுத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் காலாவதியான சுங்கச்சாவடிகளை மூட மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

5. பங்களாதேஷிற்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 5 விக்கெட் இழப்பிற்கு 144 ரன் எடுத்திருந்தது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

அரசு வேலைகள் எவ்வித முறைகேடுகளும் இல்லாமல் கிடைப்பதை பி.ஜே.பி. தலைமையிலான அரசு உறுதிசெய்யும் என்று கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் வரும் 25-ம் தேதி நடைபெறவுள்ள 2-வது கட்ட சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி இன்று ஸ்ரீ நகரில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றியஅவர், ஜம்மு காஷ்மீரில் உள்ள இளையோர் பி.ஜே.பி. அரசின் கீழ் வலிமையடைந்து உள்ளதாக குறிப்பிட்டார்.

15 ஆயிரம் தொடக்கப்பள்ளிகள் அங்கு தொடங்கப் பட்டிருப்பதாகவும், இதன்மூலம் ஒன்றரை லட்சம் குழந்தைகள் பயன்பெற்றதாகவும் கூறினார்.

கடந்த 5 ஆண்டுகளில் ஆயிரத்து 100 புதிய மருத்துவ இடங்களும், ஆயிரத்து 500 செவிலியர் இடங்களும் சேர்க்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

நாடுமுழுவதும் கடந்த 10 ஆண்டுகளில், தூய்மை பாரத இயக்கம், தேசிய இயக்கமாக உருவெடுத்துள்ளது என்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் உஜ்ஜைனில், தூய்மை பணியாளர்கள் மாநாட்டில் இன்று உரையாற்றியஅவர், தூய்மை இயக்கத்தின் மூலம் நாடு முன்எப்போதும் இல்லாத ஆக்கப்பூர்வ மாற்றங்களை கண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

தூய்மையே நாட்டை ஆரோக்கியத்திலும், வளர்ச்சிப் பாதையிலும் முன்னெடுத்துச் செல்லும் என்று அவர் கூறினார்.

மத்திய பிரதேச மாநிலத்தின் பல்வேறு நகரங்கள் தூய்மை நகரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது குறித்து அவர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

ஸ்வச்சதா பாரத் தூய்மைப்பணி இயக்கத்தின் இரண்டாவது கட்டத்தில் முழுமையான தூய்மை இலக்கை நாம் எட்டவேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் 5 தூய்மைப்பணியாளர்களை குடியரசு தலைவர் கவுரவித்தார்.

இந்தூர் - உஜ்ஜைன் 6 வழிச்சாலை திட்ட பூர்வாங்க பணிகளையும் அவர் துவக்கி வைத்தார்.

இந்தோர் அஹில்யா பல்கலைக்கழகத்தின் 14-வது பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியிலும் குடியரசு தலைவர் இன்று பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖

உலக உணவு இந்தியா

உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை வலுப்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய மத்திய உணவுத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

“உலக உணவு இந்தியா 2024” நிகழ்வை புதுதில்லி பாரத் மண்டபத்தில் இன்று துவக்கி வைத்து பேசியஅவர், நம் நாட்டின் உணவு பதப்படுத்துதல் துறையை மேம்படுத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் பயன்படுத்துவதாக அவர் எடுத்துரைத்தார்.

உலகளாவிய உணவு தொழிற்சாலைகளின் முன்னோடி நாடாக உருவெடுக்கும் வகையில் உணவு பதப்படுத்துதல் துறையில் புதுமையான தொழில் நுட்பங்கள் மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

மத்திய உணவு பதப்படுத்துதல் துறை இணையமைச்சர்கள் திரு. சிராக் பாஸ்வான், திரு. ரவ்னீத் சிங் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளனர்.

4 நாட்கள் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் 90 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

படைப்பாற்றல் திறன், நவீன தொழில்நுட்பம், நிலைத்தன்மை தொடர்பான விவாதங்கள் இதில் இடம்பெறும்.

❖❖❖❖❖❖

<u>அமித்ஷா</u>

மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித்ஷா, நரேந்திரமோடி அரசின் 3-வது ஆட்சிக்காலத்தில் முதல் 100 நாட்களில் கூட்டுறவுத்துறையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முன்னோடி திட்டங்கள் குறித்து புதுதில்லியில் தேசிய மாநாட்டில் இன்று எடுத்துரைக்கிறார்.

இந்த திட்டங்கள் கூட்டுறவு துறையை வலுப்படுத்தி இருப்பதோடு நாட்டை புதிய வேகத்துடனும், புத்துணர்ச்சியுடனும் முன்னெடுத்துச் செல்வதாக அவர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖

<u>ஸ்வச்சதா</u>

நாடு முழுவதும் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் ஸ்வச்சதா, 4-வது கட்ட தூய்மை பணிகள் அடுத்த மாதம் 2-ம் தேதிமுதல் 31-ம் தேதிவரை நடைபெறுகிறது.

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழுள்ள அலுவலகங்களில் தேங்கி கிடக்கும் கோப்புகளை அகற்றி இடமேலாண்மையை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த திட்டத்தை சிறப்பாக முன்னெடுத்துச் சென்று தூய்மைப்பணிகளை மேற்கொள்ள மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு. சஞ்சய் ஜஜு அறிவுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் சேலம் ரயில்வே கோட்டத்தில், தூய்மையே சேவை விழிப்புணர்வு பேரணியை கோட்ட மேலாளர் திரு.பங்கஜ்குமார் சின்ஹா இன்று தொடங்கி வைத்தார்.

❖❖❖❖❖❖

<u>எ.வ.வேலு</u>

தமிழ்நாட்டில் காலாவதியான சுங்கச்சாவடிகளை மூட மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும் என்று மாநில பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

வேலூர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், புதுதில்லியில் வரும் 30-ம் தேதி, மத்திய அரசு சார்பில் நடைபெறும் நெடுஞ்சாலைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் இது வலியுறுத்தப்படும் என்றார்.

தமிழ்நாட்டில் 70 ரயில்வே பாலங்களுக்கு ஒப்பந்தபுள்ளிகள் விடப்பட்டுள்ள நிலையில், 30 பாலப்பணிகள் முடிக்கப் பட்டுள்ளதாகவும், எஞ்சியவை விரைவில் முடிக்கப்படும் என்றும் தெரிவித்தார்

முன்னதாக வேலூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் 150 கோடி ரூபாய் மதிப்பில் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனை கட்டும் பணிகளை அவர் ஆய்வுசெய்தார்.

❖❖❖❖❖❖

<u>கீதாஜீவன்</u>

தமிழ்நாட்டில் சமூக நலத்துறை சார்பில் 125 பெண் குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருவதாக மாநில சமூகநலன், மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், பெண் குழந்தைகளை பராமரிக்க இயலாத நிலையில் உள்ளவர்கள் சமூக பாதுகாப்பு அலுவலகத்தில் ஒப்படைத்தால் அக்குழந்தைகளுக்கான கல்வி, உறைவிடப் பொறுப்புகளை அரசே ஏற்கும் என்றார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

<u>தங்கம் தென்னரசு</u>

கிராமங்களின் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கு தமிழக அரசு உயர் முன்னுரிமை வழங்குவதாக மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு இன்று அடிக்கல்நாட்டி பேசியஅவர், மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் சாலை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளதாக குறிப்பிட்டார்.

அரசின் நலத்திட்டங்களால் திருச்சுழி பகுதி வேகமாக முன்னேறி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

<u>மா.சுப்ரமணியன்</u>

தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் சுகாதார திட்டங்கள் குறித்து ஆஸ்திரேலியாவிற்கான இந்திய தூதர் சிலாய் ஸாஹி, மாநில அமைச்சர் திரு. மா.சுப்ரமணியனிடம் இன்று கேட்டறிந்தார்.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாநிலத்தில் செயல்படுத்தப்படும் மக்கள் நல்வாழ்வு திட்டங்கள் குறித்து ஆஸ்திரேலிய தூதரிடம் அமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖

விபத்து

விருதுநகர் மாவட்டம் குகன்பாறை தனியார் பட்டாசு ஆலையில் இன்று நேரிட்ட வெடிவிபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

பலத்த காயமடைந்த ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

திருச்சியே வாசி

திருச்சியில் புத்தக வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் “திருச்சியே வாசி” புத்தகத் திருவிழா நிகழ்வு இன்று நடைபெற்றது.

மாவட்ட நூலக அலுவலர் திரு. சிவகுமார் புத்தக வாசிப்பை பற்றி எடுத்துரைக்கையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

இருவரி

புதுக்கோட்டை மாவட்டத்தில் வாக்காளர் பட்டடியலில் பெயர்சேர்க்க 10 ஆயிரத்து 257 பேர் விண்ணப்பித்திருப்பதாக ஆட்சித்தலைவர் திருமதி. அருணா தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் வரைவு வாக்குச்சாவடி பட்டியலை அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் சந்திரகலா இன்று வெளியிட்டார்.

விழுப்புரத்தில் தொழில்நெறி வழிகாட்டு மையம் சார்பில் நாளை தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் திரு. பழனி தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள், பதிவேடுகளை ஆட்சித்தலைவர் திருமதி. சாருஸ்ரீ இன்று ஆய்வு மேற்கொண்டார்.

நாமக்கல் மாவட்டத்தில் தூய்மையே சேவை விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

500-க்கும் மேற்பட்ட மாணவிகள் தூய்மை உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில், நான் முதல்வன் திட்டத்தின்கீழ், 12-ம் வகுப்பு தேர்வில் தவறியவர்களுக்கான உயர்வுக்கு படி முகாம், வரும் 25-ம் தேதி நடைபெறும் என்று, ஆட்சித்தலைவர் திருமதி.ஆ‘ா அஜித் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖

கிரிக்கெட்

சென்னை சேப்பாக்கத்தில் பங்களாதேஷிற்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று இந்தியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 6 விக்கெட் இழப்பிற்கு 155 ரன் எடுத்திருந்தது.

யசஷ்வி ஜெய்ஸ்வால் அதிகபட்சமாக 56 ரன்னும்,

ரிஷப் பந்த் 39 ரன்னும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

ரோஹித் ஷர்மா, விராட் கோலி, சுப்மன் கில், கே.எல்.ராகுல் ஆகியோர் சொற்ப ரன்களுக்கு ஆட்டமிழந்தனர்.

ரவீந்திர ஜடேஜா மற்றும் அஸ்வின் தற்போது களத்தில் உள்ளனர்.

பங்களாதேஷின் அசன் மஹ்மூத் அபாரமாக பந்து வீசி 4 விக்கெட்டை கைப்பற்றினார்.